பிரஸார் பாரதி

அகில இந்தியவானொலி, சென்னை-4

02 02 2023 **THURSDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்:-

1. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் எதிர்க்கட்சிகளின் அமளிகாரணமாக இன்றுநாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

2. மத்தியபட்ஜெட்டில் விளையாட்டுதுறைக்கானநிதிஒதுக்கீடு 11 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகஅத்துறைக்கானஅமைச்சர் திருஅனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

3. அரசின் திட்டங்கள் குறித்தகாலத்திற்குள் நிறைவேற்றப்படுவதைஅதிகாரிகள் உறுதிசெய்யவேண்டும் என்றுமுதலமைச்சர் திருமு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஜி-20 தொடர்பானகல்விபணிக்குழுகூட்டம் சென்னையில் இன்றுநிறைவடைந்தது.

5. **Zagrep**ஓபன் மல்யுத்தசாம்பியன் போட்டியில் இந்தியாவின் **AmanSehrawat**வெண்கலப்பதக்கம் வென்றார்.

--- இனிவிரிவானசெய்திகள் ----

<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் எதிர்க்கட்சிகளின் அமளிகாரணமாக இன்றுநாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

அதானிநிறுவனம் தொடர்பாக, **Hindenburg** ஆய்வறிக்கைஉள்ளிட்டபல்வேறுபிரச்சினைகளைஎழுப்பிஎதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாகமுதலில் பிற்பகல் வரையிலும், பின்னர் நாள் முழுமைக்கும் அவைநடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

<<<<>>>>>>

மத்தியபட்ஜெட்டில் விளையாட்டுதுறைக்கானநிதிஒதுக்கீடு 11 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகஅத்துறைக்கானஅமைச்சர் திருஅனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், வரும் நிதியாண்டில் விளையாட்டுத்துறைக்கானநிதிஒதுக்கீடு 3 ஆயிரத்து 397 கோடி ரூபாய்க்கும் கூடுதலாகஉள்ளதுஎன்றுகுறிப்பிட்டார்.

இதற்காக, நிதியமைச்சர் திருமதிநிர்மலாசீதாராமனுக்குநன்றிதெரிவித்துக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை இல்லாதஅளவிற்குவிளையாட்டுத்துறைமேம்பாட்டிற்கானபணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் திருஅனுராக் தாக்கூர் கூறினார்.

<<<<>>>>>>

ரயில்வேயின் பயணியர் வருவாய் நடப்பு நிதியாண்டில் இதுவரை 73 சதவீதம் அதிகரித்துள்ளதாகமத்தியஅரசுகூறியுள்ளது.

கடந்தநிதியாண்டில் இதேகாலக்கட்டத்தில் ரயில்வேயின் வருவாய் 31 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இருந்ததாகரயில்வேத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தற்போது இது, 54 ஆயிரத்து 733 கோடி ரூபாய் அளவிற்குஅதிகரித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்பதிவு வசதி இல்லாதகட்டணவருவாய் 11 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாகஉள்ளதுஎன்றுஅந்தசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்தஆண்டுடன் ஒப்பிடுகையில் 361 சதவீதம் அதிகமாகும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>>>

அரசுதிட்டங்களைகுறித்தகாலத்திற்குள் நிறைவேற்றுவதைஅதிகாரிகள் உறுதிசெய்யவேண்டும் என்றுமுதலமைச்சர் திருமு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

“களஆய்வில் முதலமைச்சர்”என்றதிட்டத்தின்கீழ், இன்றுவேலூரில் நான்குமாவட்டஆட்சித்தலைவர்கள் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டுபேசுகையில்அவர் இவ்வாறுகூறினார்.

<<<<>>>>>>

ஜி-20 தொடர்பானகல்விபணிக்குழுகூட்டம் இன்றுசென்னையில் நிறைவடைந்தது.

இந்த மூன்றுநாள் கூட்டம் தொடர்பாக, மத்தியஉயர்கல்வித்துறைசெயலர் திரு சஞ்சய் மூர்த்தி, செய்தியாளர்களிடம் பேசினார்.

இதில் பங்கேற்றபிரதிநிதிகளுக்குதமிழகத்தில் சிறப்பானவிருந்தோம்பல் அளிக்கப்பட்டதாகஅவர் தெரிவித்தார்.

இந்தகூட்டத்திற்காக, சென்னை ஐ ஐ டி செய்தஏற்பாடுகள் சிறப்பாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

கல்வித்துறைவளர்ச்சிக்கானஅம்சங்கள் குறித்து இந்தபணிக்குழுகூட்டத்தில் விரிவாகவிவாதிக்கப்பட்டதாகஅவர் தெரிவித்தார்.

பெரும்பாலானவிவாதங்களில் ஒருமித்தகருத்துஎட்டப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜூன் மாதம் வரை ஜி-20 மாநாட்டில் கல்வித்துறைசார்பில் விவாதிக்கவேண்டியஅம்சங்கள் குறித்துதொடர் ஆலோசனைமேற்கொள்ளப்படும் என்றும் திரு சஞ்சய் மூர்த்திதெரிவித்தார்.

<<<<>>>>>>

சர்வதேசஈரநிலதினம் இன்றுகடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறுவிழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நாளையொட்டி, கடலூர் மாவட்டத்தில் மாணவர்கள் பங்கேற்றவிழிப்புணர்வு பேரணிநடைபெற்றதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>>>

ஈரோடுகிழக்குசட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் இன்றுமட்டும் பத்துபேர் வேட்புமனுதாக்கல் செய்துள்ளனர். மனுதாக்கல் தொடங்கி மூன்றாம் நாளான இன்றுவரை 20 பேர் மனுதாக்கல் செய்துள்ளனர்.

<<<<>>>>>>

இசைபடைப்புகளுக்கானசேவைவரிவிதிப்பைஎதிர்த்து, இசையமைப்பாளர்கள் ஏ ஆர் ரகுமான், ஜி விபிரகாஷ் தாக்கல் செய்தமனுக்களைசென்னைஉயர்நீதிமன்றம் தள்ளுபடிசெய்துள்ளது.

இதுதொடர்பானமனுவினைவிசாரணைசெய்தநீதிபதிதிருமதிஅனிதாசுமந்த், இன்று இதற்கானஉத்தரவினைபிறப்பித்தார்.

சேவைவரிவிதிப்பு தொடர்பாக, சம்பந்தப்பட்டஅதிகாரிமற்றும் மேல் முறையீட்டுஅதிகாரியைஅணுகுமாறுஅந்தஉத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>>

இலங்கைஅருகேகரையைகடந்தகாற்றழுத்ததாழ்வு மண்டலம், நாளைகாலைகுமரிக்கடல் மற்றும் அதனையொட்டியுள்ளபகுதிகளில் நிலவக்கூடும் என்றுசென்னைவானிலைஆய்வு மைய இயக்குனர் திருசெந்தாமரைகண்ணன் கூறியுள்ளார்.

எமதுசெய்தியாளரிடம் பேசுகையிலஅவர் இவ்வாறுகூறினார்.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனைசுற்றியுள்ளபகுதிகளில் பலத்தகாற்றுவீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்குசெல்லவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்படுவதாகதிருசெந்தாமரைகண்ணன் தெரிவித்தார்.

<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் பருப்பு வகைகளின் இருப்பு அளவை இறக்குமதியாளர்கள் வெள்ளிக்கிழமைதோறும் பதிவேற்றம் செய்யவேண்டும் என்றுஆட்சியர் திருமதி ஷ்ரேயாசிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

---------

கள்ளக்குறிச்சிமாவட்டத்தில் சிறுதானியத்தின் முக்கியத்துவம் தொடர்பானவிழிப்புணர்வு வாகனபிரச்சார இயக்கத்தைவருவாய் அலுவலர் திருசத்தியநாராயணன் இன்றுதொடங்கிவைத்தார்.

----------------

பழனிஅருள்மிகுதண்டாயுதபாணிசுவாமிதிருக்கோவிலில் தைப்பூச திருவிழவைமுன்னிட்டு இன்றுமுதல் வரும் 6-ஆம் தேதிவரைமலைக்கோவிலில் தங்கரத புறப்பாடுநடைபெறாதுஎன்றுகோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Zagrep**ஓபன் மல்யுத்தசாம்பியன் போட்டியில் இந்தியாவின் **AmanSehrawat**வெண்கலப்பதக்கம் வென்றார். குரேஷியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 57 கிலோஎடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைகைப்பற்றினார்.

---------------------

முத்தரப்பு மகளிர் டுவெண்டி—வெண்டிகிரிக்கெட் போட்டியில் இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான இறுதியாட்டம் சற்றுமுன் தொடங்கியது.

தென்னாப்பிரிக்காவின் ஈஸ்ட் லண்டனில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியாமுதலில் பேட் செய்துவருகிறது

----------------

**Amman-**ல் நடைபெற்றுவரும் சர்வதேசடேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **DiyaParagChitale**காலிறுதிக்குமுந்தையசுற்றுக்குமுன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>>